செ.வெ.எண்: 9 / ஜின் / 2019

நாள் : 3. 6. 2019

# பத்திரிக்கை செய்தி

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையும் கல்வித்துறையும் இணைந்து +2 வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு மதிப்பெண் சான்று வழங்கப்படும் பள்ளிகளிலேயே வேலைவாய்ப்பு அலுவலக பதிவுப்பணி நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. +2 வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மட்டும் தங்களது பதிவு செய்ய ஏதுவாக 10ம் வகுப்பு கல்வித்தகுதியினை பதிவு செய்த வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டை எண், ஆதார் அட்டை எண், குடும்ப அட்டை, கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகிய விவரங்களுடன் மதிப்பெண் சான்று வழங்கப்படும் நாளன்று எடுத்து வர வேண்டும். 10ம் வகுப்பு கல்வித் தகுதியினை பதிவு செய்தவர்கள் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எண் தெரியவில்லையெனில் வேலைவாய்ப்பு அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

03.06.2019 நாள் முதல் 17.06.2019 வரை வேலைவாய்ப்பு பதிவுப்பணி அந்தந்த பள்ளிகளிலேயே நடைபெறும். பதிவுப்பணி நடைபெறும் 15 நாட்களுக்கும் மதிப்பெண் சான்ற வழங்க தொடங்கிய முதல் நாளையே பதிவு மூப்பு தேதியாக வழங்கப்படும். மேலும் www.tnvelaivaaippu.gov.in என்ற வேலைவாய்ப்புத்துறை இணையதளம் வழியாகவும் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. +2 வகுப்பு தேர்ச்சி பெற்ற வேலைவாய்ப்பு பதிவு செய்ய விரும்பும் அனைத்து மாணவர்களும் தவறாது இந்த வசதியை பயன்படுத்திக்கொள்ளுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எஸ்.சிவராசு, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவிக்கிறார்.

**ஒப்/-............**
**மாவட்ட ஆட்சித்தலைவர்**
திருச்சிராப்பள்ளி

3/6/19

துணை இயக்குநர்
மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி.

3/6/19